Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2011-2012

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Feb. 12 : 528 Nos.
  - Up to Jan. 12 : 515 Nos.
- **Performance Feb. 12 ...**
  - Turnover growth : 4.08%
  - Employment growth : -1.08%
  - 100% Attendance : 11.17%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade We Deliver Value Chain – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSC Pattern School)

## ACHIEVEMENT




## நல்ல மனசாட்சி

நல்ல மனிதருடைய மேன்மை அவருடைய நல்ல மனசாட்சியே.

நல்ல மனசாட்சி உள்ளவர் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளவும், இன்னல், இடையூறுகளின் இடையில் மகிழ்ச்சி கொள்ளவும் செய்வார். கெட்ட மனசாட்சி உள்ளவரோ எப்போதும், பயத்திலும், கலக்கத்திலும் இருப்பார். அவர் உண்மையான இன்பத்தையும், மகிழ்ச்சியையும், ஒரு போதும் அடைவதில்லை. சமாதானத்தையும் உணர்வதில்லை. அக்கிரமங்களுக்கு சமாதானம் என்றுமில்லை.

இதற்கு உதாரணம் ஒரு ஏமாற்றுகாரன். அவனுக்கு ஊரில் உள்ளவர்களை ஏமாற்றி பிழைப்பதே தொழிலாக இருந்தது. அவ்வாறு மற்றவர்களை ஏமாற்றுவதை பெரிய புத்திசாலிதனமாக நினைத்திருந்தான். ஒரு முறை தான் வைத்திருந்த கிணற்றை ஒருவனுக்கு விற்றுவிட்டான். ஆனால் வாங்கியவன் தண்ணீர் எடுக்க வந்தபோது தண்ணீர் தரமறுத்துவிட்டான். "இதோபார், நான் கிணற்றை தான் உனக்கு விற்றேனே தவிர, கிணற்றிலுள்ள நீரையல்ல. அதனால் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று சொல்லிவிட்டான். வாங்கியவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்த ஏமாற்றுக்காரனை எப்படி சமாளிப்பது என்று புரியவில்லை.

அந்த சமயம் ஊருக்கு பெரியவர் ஒருவர் வந்தார். அவரிடம் கிணற்று நீர் பிரச்சனை சொல்லப்பட்டது. அவர் சிறிது நேரம் யோசித்தார். பிறகு "கிணற்றை மட்டும் தானே இவர் வாங்கியிருக்கின்றார். அப்படியானால் நீ கிணற்றிலுள்ள நீரையெல்லாம் எடுத்துவிட்டு அவருக்கு கிணற்றை கொடு. இல்லையென்றால் அவருடைய கிணற்றில் உன் தண்ணீர் இருப்பதால் அதற்கு வாடகை கொடு" என்று தீர்ப்பு சொன்னார்". அதை கேட்டு ஏமாற்ற நினைத்தவன் ஏமாந்து போனான்!.

தொகுத்தளித்தவர் : Ms. P.E. Nancy
Director – Admin

## We are not meant to destroy each other

It is our earth, not yours or mine or his. We are meant to live on it, helping each other, not destroying each other. This is not some romantic nonsense but the actual fact. But man has divided the earth, hoping thereby that in the particular he is going to find happiness, security, a sense of abiding comfort. Until a radical change takes place and we wipe out all nationalities, all ideologies, all religious divisions, and establish a global relationship - psychologically first, inwardly before organizing the outer - we shall go on with wars. If you harm others, if you kill others, whether in anger or by organized murder which is called war, you, who are the rest of humanity, not a separate human being fighting the rest of mankind, are destroying yourself. This is the real issue, the basic issue, which you must understand and resolve. Until you are committed, dedicated, to eradicating this national, economic, religious division, you are perpetuating war, you are responsible for all wars whether nuclear or traditional.

Compiled by : Mr. G. Balachandran
Research & Development

## FUNCTIONAL WISHES



**Easter**
**8th April**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel:22294565<br>M/s. Jeya Clinic,<br>Tel: 98408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. Mohana Kumar. G. S**<br>Production | **1st April** |
| **Mr. Manivannan. G**<br>Coating | **1st April** |
| **Mr. Abilash. C**<br>Facilitation | **3rd April** |
| **Mr. Raveendran. T**<br>Logistics | **4th April** |
| **Mr. Janarthanan. G**<br>FR Production | **5th April** |
| **Mr. Pullan. M**<br>Utilities | **7th April** |
| **Mr. Nedunchizhian. A**<br>Production | **7th April** |
| **Mr. Ramesh. T**<br>Production | **8th April** |
| **Mr. Murugan. K**<br>Production | **8th April** |
| **Mr. Stephen Prabakar. T**<br>Finance | **9th April** |
| **Mr. Balasubramanian. P**<br>Production | **11th April** |
| **Mr. Subash. C**<br>Production | **13th April** |
| **Mr. Muruganantham. N**<br>FR Production | **20th April** |
| **Mrs. Nirmala. A**<br>Finance | **22nd April** |
| **Mr. Ramesh. R**<br>Quality Control | **27th April** |
| **Mr. Shanmugam. N**<br>Project | **30th April** |

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

வனாந்திரத்தில் வசித்த முனிவர் குளிக்கப் போகும்போது அபூர்வமான மாணிக்கக்கல் கிடைத்தது. அவரை சந்தித்த பக்தர் கேட்டதும் மகிழ்ச்சியோடு கொடுத்தார். “விலையுயர்ந்த கல்! விவரம் தெரியாமல் தருகிறார்” என்று வியந்த பக்தர் வீட்டில் வைத்தார். அதைக்காப்பாற்ற வேண்டுமே என்கிற கவலையில் தூக்கமில்லாத இரவுகள் கழிந்தன. முனிவரிடம் திருப்பிக் கொடுத்து மன்னிப்புக் கேட்டார். முனிவர் சொன்னார். “இரு இதைவிட பலமடங்கு விலையுயர்ந்த ஒன்றைத் தருகிறேன்!” பக்தரை அமர வைத்து தியானம் சொல்லித் தந்தார் முனிவர் முன்பின் அறிந்திராத மனநிறைவோடு திரும்பினார் பக்தர்.

செல்வத்தைவிட மன அமைதியே வாழ்க்கைக்கு மிக அவசியம்.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## கிறிஸ்டோபர் கொலம்பஸ்

அவன் ஒரு உறுதியான இளைஞன். நிறைய சாதிக்க வேண்டும் என்கிற வெறி அவனுள் இருந்தது. அவன் அப்பாவோ சாதாரண நெசவாளி. அவன் கைகள் ஆடைகளை நெசவு செய்தாலும் மனமோ கனவுகளை நெசவு செய்தது. அந்த இளைஞன் தான் கிறிஸ்டோபர் கொலம்பஸ். உலகில் மற்றவர்கள் மீனையும், முத்தையும் தேடிய போது புதிய நாட்டையே தேடும் எண்ணம் அந்த இளைஞனுக்கு இருந்தது. உதவத்தான் ஒருவரும் முன் வரவில்லை.

பத்து வருட காலம் தொடர்ந்து போராடிய பின் ஸ்பெயின் நாட்டு அரசி இசபெல்லாவுக்கு கொலம்பஸ் மீது நம்பிக்கை பிறந்தது. 3 கப்பல்களையும், பயணத்திற்கு தேவையான உணவு பொருட்களையும் தந்து உதவினார். கிழக்கே இருக்கும் இந்தியாவை அடைய புறப்பட்ட பயணம் தவறாக மேற்கே நோக்கி நிகழ்ந்ததுதான் அமெரிக்காவை கண்டுபிடிக்க காரணம் ஆயிற்று.

அந்த பயணத்தின் போது…

சுமார் 15 நாட்கள் கடந்தது. எதிர்புறம் ஏதும் நிலபரப்பு இருப்பதற்க்கான அறிகுறியே தென்படவில்லை. உடன் பயணம் செய்தவர்கள் எல்லாம் கொலம்பஸை ஏளனம் செய்தனர், அவரது நம்பிக்கையை பழித்தனர். உணவு பொருட்கள் தீர்ந்து கொண்டு வந்ததால் வந்த வழியே சென்று விடுவோம் இல்லையென்றால் அனைவரும் கப்பலிலேயே உணவின்றி செத்து மடிய வேண்டியதுதான் என அனைவரும் ஒத்துழைக்க மறுத்தனர். கொலம்பஸ் மட்டும் முழு நம்பிக்கையோடு தண்ணீரையே பார்த்து கொண்டிருந்தார். அப்போது தண்ணீரில் சில வைக்கோல் துண்டுகள் மிதந்து வந்ததையும், மறுநாள் பறவைகள் பறந்து சென்றதையும் பார்த்த உடன் அவர் முகத்தில் நம்பிக்கை பிரகாசித்தது, அவரது விளக்கத்தை உடன் பயணம் செய்தவர்களும் ஒப்புக்கொண்டு அமெரிக்க நிலபரப்பை அடைந்தனர்.

தலைமை தாங்குபவர்களுக்கு தான் அந்த தைரியம் துணிச்சல் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கை வரும். எவ்வளவு இடைஞ்சல்கள் பிரச்சனைகள் வந்தாலும், தான் நினைத்த இலக்கினை அடையும் வரை அதிலிருந்து சிறிதும் பின்வாங்க மாட்டார்கள்.

Compiled by : Mr. Shahul Hameed Bava
Facilitation

## தெரிந்து கொள்வோம்

### Expiry date also for LPG Cylinders




Do you know that there is an expiry date (physical life) for LPG cylinders. Expired Cylinders are not safe for use and may cause accidents. In this regard, please be cautious at the time of accepting any LPG cylinder from the vendor.

**Here is how we can check the expiry of LPG cylinders:**

On one of three side stems of the cylinder, the expiry date is coded alpha numerically as follows A or B or C or D and some two digit number following this e.g. D-06.

The alphabets stand for quarters,

1. A for January to March (First Qtr.)
2. B for April to June (Second Qtr.)
3. C for July to September (Third Qtr.)
4. D for October to December (Fourth Qtr.)

The digits stand for the year till it is valid. Hence D06 would mean December quarter of 2006. Please Return Back the Cylinder that you get with a Expiry Date, they are prone to Leak and other Hazardous accidents...

Compiled by : Mr. S. Siva Deepan
Facilitation

### டிப்ஸ் டிப்ஸ்

- வெங்காயம் உரிக்கும்போது சூயிங்கம் மென்றால் கண்களிலிருந்து கண்ணீர் வெளிவராது.
- துணியில் பபுள்கம் ஒட்டிக் கொண்டால் ஐஸ் கட்டியை அதன் மேல் வைத்து பிறகு எடுத்தால் எளிதில் வந்துவிடும்.
- சட்டையில் இங்க் (Ink) கறைபட்டால் தயிர் தடவி சிறிது நேரம் ஊறவைத்து பின் சோப்பு போட்டுத் துவைத்தால் கறை எளிதில் நீங்கும்.
- சிரிப்பது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

Compiled by : Miss. C. Ramya Devi
D/o. Mr. S. Chinnathangam - Coating

### தமிழன் பெருமைகள்

**நான்கு வரி செய்யுளில் பிதாகரஸ் கணித கோட்பாடு!!!!**

இன்று நாம் அனைவரும் சொல்லிக் கொண்டிருக்கின்ற பிதாகரஸ் கோட்பாடு (Pythagoras Theorem) என்ற கணித முறையை, பிதாகரஸ் என்பவர் கண்டறிவதற்கு முன்னரே, போதையனார் என்னும் புலவர் தனது செய்யுளிலே சொல்லியிருக்கிறார்.

**ஓடும் நீளம்தனை ஒரே எட்டுக்**
**கூறு ஆக்கி கூறிலே ஒன்றைத்தள்ளி**
**குன்றத்தில் பாதியாய்ச் சேர்த்தால்**
**வருவது கர்ணம் தானே.**




இக்கணித முறையைக் கொண்டுதான் அக்காலத்தில் குன்றுகளின் உயரம் மற்றும் உயரமான இடத்தை அடைய நாம் நடந்து செல்ல வேண்டிய தூரம் போன்றவைகள் கணக்கிடப்பட்டுள்ளன. போதையனார் கோட்பாட்டின் சிறப்பம்சம் என்னவென்றால், வர்க்கமூலம் (Square root) இல்லாமலேயே, நம்மால் இக்கணிதமுறையை பயன்படுத்த முடியும்.

தமிழன் ஒரு வேலை கற்றலையும் / கல்வியையும் பொதுவுடமையாகவும், உலகறியச் செய்து இருந்தால் அவர்கள் தரணி எங்கும் அறியப்பட்டு இருப்பார்கள்.

Compiled by : Mr. M. Siva Kumar
Marketing

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி IX)

### ஒழுங்கு

நாமும் இந்த வார்த்தைகளைத் தமிழில் மொழி பெயர்த்துப் படுத்தாமல், உலகின் மிகப் பிரபலமான இந்த ஐந்து ஜப்பானிய வார்த்தைகளையும் கற்றுக்கொண்டு பயன்படுத்தத் தொடங்குவோமாக.

செய்ரி, செய்டன், செய்சோ, செய்கெட்ஸு, ஷிஸுகே–வாய் நிறைய பன்னீர்ப் புகையிலை போட்டதுபோல் உச்சரிக்க சுகமாகத்தான் இருக்கிறது. ஆனால், இவற்றுக்கு என்ன அர்த்தம்? அப்படி இவற்றில் என்ன மந்திர சூட்சுமம் அடங்கியிருக்கிறது?

அதைப்பற்றி விரிவாகப் பேசுமுன், இங்கே ஒரு மேஜை இருக்கிறது. அதில் ஏகப்பட்ட புத்தகங்களும், செய்தித்தாள்களும், எழுதுபொருள்களும், இன்னும்பிறவும் குவிந்து கிடக்கின்றன. அதைக் கொஞ்சம் ஒழுங்காக அடுக்கிவைப்போமா?
முதலில், இது யாருடைய மேஜை? என்னுடைய மேஜைதான். பெரிய எழுத்தாளன் என்றால், மண்டையில் மசாலா இல்லாவிட்டால் கூட பரவாயில்லை. எழுதுவதற்கு ஓர் அழகான மேஜை கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று யாரோ சிந்தனையாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான், நிறையச் செலவழித்து, பளபளப்பாக இந்த மேஜையைச் செய்துகொண்டேன்.

அதன் பிறகு, ஒன்றிரண்டு வாரங்கள் இதில் உட்கார்ந்து நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் எழுதிக் கொண்டிருந்தேன். அப்போதெல்லாம், அடுத்த நோபல் நமக்குதான் என்று ஒரு பெருமித உணர்வு தோன்றியது பாருங்கள், அதை விவரிக்க வார்த்தைகளே இல்லை.

## கவிதைகள்

### உயர்வு

உளியின் வலி தாங்கி
சிலையாய் உருவானது
“பாறை”
சிப்பிக்குள் தவம் செய்து
முத்தாய் உருவானது
“மழைத்துளி”
மண்ணுக்குள் மூச்சை அடக்கி
வைரமாய் உருவானது
“நிலக்கரி”
உயர்வு என்பது
உயரத்தில் இல்லை
நம் முயற்சியில் தான்
இருக்கிறது.

Compiled by : Mr. D.S. Anish
System Admin

### வெற்றி

வெற்றி வரும் வரை
குதிரை வேகத்தில் ஓடு,
வெற்றி வந்த பிறகு
குதிரையை விட வேகமாக ஓடு
அப்போதுதான்
வெற்றி உன்னிடம் நிலைத்திருக்கும்.

Compiled by : Mr. C. Abilash
Facilitation

### அறிவிப்பு

→ நமது நிறுவனம் குட்டீஸ்.com என்ற புதிய இணையதளத்தை நமது குழந்தைகளுக்காக உருவாக்கி உள்ளது. எனவே அனைவரும் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கைக் குறிப்பு போன்ற விவரங்களை (www.tianode.com/kutties) என்ற இணைய முகவரியில் பதிவுசெய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

→ நடைபெறவிருக்கும் 10வது(2012) அலுவலர் தினவிழாவின் குழந்தைகள் கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் குழந்தைகளின் பெற்றோர்கள் தத்தம் பெயர்களை திருமதி. ஷாஹின் மணிகண்டன் (kutties@tianode.com) அவர்களிடம் பதிவு செய்து கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு.** நிரந்தர பணியாளர்களின் குழந்தைகள் மட்டும் கலைநிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**இப்படிக்கு
விழாக்குழு**

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor**

ஆனால், எனக்கு நோபல் பரிசை வாங்கித் தந்திருக்க வேண்டிய இந்த அழகு மேஜை, இப்போது அழுக்கடைந்துபோய் குப்பையாகக் குவித்து கிடக்கிறதே! இதை என்ன செய்யலாம்? ஒழுங்குபடுத்தலாம். ஆனால் எப்படி? ஒவ்வொன்றாக யோசிப்போம். முதலில், இந்த மேஜையின் மீது என்னென்னவோ சமாச்சாரங்கள் தூசி படியக்கிடக்கிறதே. அவற்றை சின்னதாக ஒரு பட்டியல் போடலாமா?

பாதியும் அதற்குக் குறைவாகவும் படித்து முடித்த புத்தகங்கள்
கசங்கிய வார இதழ்கள் சில.
அதைவிட மோசமான நிலையில் ஒன்றிரண்டு நாளிதழ் பக்கங்கள்
போன வாரம் எப்போதோ குடித்த காபி டம்ளர்
மொபைல் ஃபோன் பில் ஒன்று
அரைக்கால் உடைந்த ‘பார்பி’ பொம்மை
மோசமாகக் கிழிந்த காகிதங்கள் ஏழெட்டு, அவற்றில் சில அவசரக் கிறுக்கல்கள்
புத்தம்புதுசாகக் குறிப்பேடுகள் இரண்டு
பல் குத்தும் குச்சிகள் நான்கைந்து
நாற்றமடிக்கும் ஒற்றை சாக்ஸ்
யாரோ யாருக்கோ அனுப்பிய ‘ஹாப்பி பர்த் டே’ கார்ட் ஒன்று.

இந்தப் பட்டியலைத் தயார் செய்வதற்காக, மேஜையிலிருந்த எல்லாப் பொருள்களையும் சற்றே நகர்த்தி வைத்ததில் கொஞ்சம் காலியிடம் தெரிகிறது. ஆகவே, மேஜையை ஒழுங்குபடுத்தி விடலாம் என்று ஒரு நம்பிக்கை பிறக்கிறது.

அதற்குமுன், நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டிய ஒரு விஷயம். இந்த மேஜையின் மீது இத்தனை பொருள்களைத்தான் வைக்கலாம் என்று ஒரு மரியாதையான எல்லை உண்டு. அதை மீறி, பொருள்களை இஷ்டப்படி நிரப்பியதால்தான், எழுதுவதற்காகச் செய்த மேஜையின் மீது, ஒரு பென்சிலை வைக்கக் கூட இடமில்லாமல் போய்விட்டது.

அப்படியானால், நாம் முதலாவதாகச் செய்யவேண்டிய வேலை என்ன?

தொடரும்…

## INAUGURAL FUNCTION OF HYDRO-GEN

